DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 73/2021**

Prosecution **PW. 13**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.சுப்பையா | கிராமம் : | |
| தந்தைபெயர் : | கருப்பன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.07.2026

3ம் எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 1, 2, 4, 5 எதிரிகளுக்கு வழக்கு தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் புதுக்கோட்டை மாவட்டம், கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.07.2012 ம்தேதி அதிகாலை 00.30 மணிக்கு கரூர் மாவட்டம், வீரராக்கியத்தை சேர்ந்த பெரியண்ணக்கவிண்டன் மகன் சாமியப்பன் என்பவர் மாயனூர் காவல் நிலையம் ஆஜராகிஎழுத்து மூலமாக கொடுத்த புகாரினை பெற்று நிலையக்குற்ற எண 231/2012 இதச பிரிவுகள் 392 ன்படி மாயனூர் காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

2. வழக்கு கோப்பினை பெற்ற காவல் ஆய்வாளர் பாஸ்கரன் பொறுப்பு அவாகள் சம்பவ இடம் சென்ற பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து ஆரம்ப கட்ட புலன் விசாரணை செய்தார். நான் விடுமுறை முடிந்து பணிக்கு வந்து வழக்கு கோப்பினை பெற்று பார்வையிட்டு 11.11.2012 ம் தேதி காலை 09.00 மணிக்கு காவல் நிலைய சரக மணவாசி, டோல்பிளாசா அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது கரூரிலிருந்து திருச்சி நோக்கி TN 36B

4415 என்ற TVS 50 இருசக்கர வாகனத்தில வந்து கொண்டிருந்த இரண்டு நபர்களை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தோம்.

3. அப்போது அதில் ஒருவர் மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட பாலு (எ) பாலசுப்பிரமணியன் (வயது 32) த/பெ பழனியப்பன் 2. அருண் வயது 25 த/பெ அருணாச்சலம், என்று கூறினார்கள். இவர்களை வழக்கு சம்பந்தமாக விசாரித்த போது மேற்படி மாயனுர் காவல்நிலைய குற்ற வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறியதால் ஆஜர் சாட்சிகள் 1. கிருஷ்ணன், த/பெ வேலாயுதம், 2. சிவசுப்பிரமணி த/பெ சுப்புராயன் ஆகியோர்கள் முன்பு தனிதனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

4. பாலு (எ) பாலசுப்ப்பிரமணியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில மேற்படி சம்பவத்தின் போது பயன்படுத்திய இருசக்கர வாகனம் TN 36B 4415 ஐ சம்பந்தப்பட்டுள்ளதால் மேற்படி சாட்சிகள் முன்பு பகல் 10.50 மணிக்கு அதே இடத்தில் சுமார் 8 கிராம் எடையுள்ள 4 தங்ககாசுகள் மொத்தம் 32 கிராம் தங்கம் மற்றும் TN 36B 4415 என்ற இருசக்கர வாகனத்தையும் மகஜரில கைப்பற்றினேன். **(பாலசுப்பிரமணியத்தின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

5. பின்பு அருண் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை மேற்படி சாட்சிகள் முன்பு பதிவு செய்தும் பகல் 13.18 மணிக்கு சம்பவ இத்தில் இருந்து கொள்ளையடித்த சுமார் 32 கிராம் எடையுள்ள தங்கதாலி செயின் ஒன்றையும், சுமார் 16 கிராம் எடையுள்ள தங்கசெயின் எடுத்து ஆஜர் செய்ததையும் மேற்படி சாட்சிகள் முன்பு அதே இடத்தில் சாட்சிகள் முன்பு மகஜரில் கைப்பற்றினேன்.

**(அருண் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**
**(பாலு என்பவரிடம் 15.00 மணிக்கு கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**
**(அருண் என்பவரிடம் 13.15 மணிக்கு கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6. பின்பு பாலு (எ) பாலசுப்பிரமணியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் வெங்கமேடு காவல் சரகம் அரசு காலனி மனோகர் என்பவரின் வீட்டுக்கு அருகில் உள்ள குப்பை குழியில் இருந்து சுமார் 8 கிராம் எடையுள்ள

4 தங்ககாசுகளை எடுத்து ஆஜர் செய்தததில் பகல் 15.00 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்பு மகஜரில் கைப்பற்றினேன். பின்பு மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தும் மேற்கண்ட 2 எதிரிகளை மாயனூர் காவல் நிலையம் அழைத்து வந்து உரிய ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்ற உத்தரவுகளை பின்பற்றி குளித்தலைகுற்றவியல் நடுவர் எண். 2 நீதிமன்றத்திற்கு கைது வழி காவல் அனுப்பி வைத்தேன்.

7. பின்பு மகஜரில் கைப்பற்றப்பட்ட தடயங்களை படிவம் –95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(இருசக்கர வாகனம் TN 36B 4415 படிவம் –95 அ.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (சுமார் 8 கிராம் எடையுள்ள 4 தங்ககாசுகள் படிவம் –95 அ.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (32 கிராம் எடையுள்ள தங்கதாலி செயின் ஒன்றையும், சுமார் 16 கிராம் எடையுள்ள தங்கசெயின்அ.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**
**(பச்சை நிற TVS 50 கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

8. பின்பு 22.11.2012ம் தேதி மேற்கண்ட 2 எதிரிகளை அடையாள அணிவகுப்பு நடத்திட கரூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் பேரில் திருச்சி மத்திய சிறையில் மேற்கண்ட இரண்டு எதிரிகளையும் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது.

9. பின்பு 12.12.2012ம் தேதி இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி முருகன் வயது 26 த/பெ வெங்கடேசப்பா என்பவரை சேலம் மத்திய சிறையில் இருந்து போலிஸ் காவலில் எடுத்து மாயனூர் காவல் நிலையம் வந்து காலை 10.00 மணிக்கு சாட்சிகள் அருணாச்சலம் த/பெ பொன்னுசாமி, 2. ராமலிங்கம் த/பெ பழனியப்பன் ஆகியோர்கள் முன்பு எதிரி முருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

10. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் மேற்படி சம்பவ இடத்தில சம்பவம் நடந்த போது கொள்ளையடித்தாக கூறப்பட்ட நகைகளை தான் மறைத்து வைத்துள்ளதாகவும், தங்களிடம் சம்பவ நடந்த இடத்தையும் நகைகள் மறைத்து வைத்துள்ள இடத்தையும் அடையாளம் காண்பிப்பதாகவும் கூறியதன் பேரில் மேற்படி எதிரி சாட்சிகளுடன் சம்பவம் நடந்த இடத்தை அடையாளம் காட்டினார்.

11. 12.12.2012 பகல் 14.30 மணிக்கு மேற்படி எதிரி சம்பவத்தின் போது கொள்ளையடித்தாக கூறப்பட்ட நகைகளை மறைத்து வைத்துள்ள இடமான நாமக்கல் செல்லும் வழியில் உள்ள தூளிப்பட்டி என்ற இடத்தில் சுமார் 9 கி.மீ என்று வேலூர் என்று குறிக்கப்பட்டுள்ள மைல்கல் அருகே இடதுபுறம் உள்ள பனைமரத்தடியில் ரோட்டின் உள்புறம் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய பிளாஸ்டிக் பையில் இருந்து 10 அயிட்டமாக உள்ள சுமார் 5 பவுன் நகைகளை எடுத்து மேற்படி சாட்சிகள் முன்பு ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**(முருகன் என்பவரிடம் 14.30 மணிக்கு கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) முருகன் என்பவரின் கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

12. பின்பு மேற்படி எதிரியை போலிஸ் காவல் முடித்து நீதிமன்றத்தில் ஒப்படைத்து மேற்கண்ட நகைகளை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். **(10 அயிட்டமாக உள்ள சுமார் 5 பவுன் நகைகளை அனுப்பிய படிவம் –95 அ.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (அடையாள அணிவகுப்பு அ.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**13.** பின்பு 18.12.2012ம் தேதி இந்த வழக்கில் தொடர்புடைய எதிரி பிரபாகரன் த/பெ அருணாச்சலம் என்பவரை நீதிமன்ற உத்தரவு படி உத்தரவு பெற்று போலிஸ் காவலில் எடுத்து மாயனூர் காவல் நிலையத்தில் காலை 10.30 மணிக்கு சாட்சிகள் பெரியசாமி, சண்முகம் ஆகியோர்கள் முன்பு மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

14. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கோவையில் தெரிந்த நபர் ஒருவரான மோகன்ராஜ் என்பவரிடம் சம்பவ இடத்தில் கொள்ளையடித்த சுமார் 11 பவுன் நகைகளை கொடுத்து வைத்துள்ளதாகவும் அந்த இடத்தை அடையாளம் காண்பிப்பேன் என்று கூறியதன் பேரில் மேற்படி எதிரி மற்றும் சாட்சிகளுடன் கோவை சென்று மேற்படி நபர் காட்டிய மோகன் ராஜ் என்ற நபரிடம் விசாரணை செய்தும் பின்பு மாயனூர் காவல் நிலையம் வந்து சாட்சிகளை விசாரணை செய்தும் எதிரியை போலிஸ் காவல் முடித்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன்.

15. இந்த வழக்கில் ஏற்கனவே பொறுப்பு காவல் ஆய்வாளர் திரு.பாஸ்கரன் அவர்களிடம் வாக்குமூலங்கள் அளித்த சாட்சிகள் அதே மாதிரி கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்பு 27.07.2012 ம் தேதி சாட்சி மு.நி.கா.முருகானந்தம், மற்றும் மு.நி.கா. அன்பழகன். த.கா. பெரியசாமி, விரல் ரேகை ஆய்வாளர் ராஜலிங்கம் , மற்றும் பால்ராஜ் மற்றும் உதவி ஆய்வாளர் செந்தில்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

16. பின்பு 05.10.2014 ம் தேதிஎனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் முருகன், பிரபாகரன், அருண், பாலு (எ) பாலசுப்பிரமணியம், தர்மராஜ் ஆகியோர்கள் மீது சட்டப்பிரிவு 392, 411, 457, 506(1), உ/இ 34, 392, 109 இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

3 ம் **<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 26.07.2012 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் –7 ல் எதிரியின் பெயர்முகவரி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேல் விசாரணை மற்றும்சாட்சிகளை விசாரணை செய்தது மட்டும் என்றால் சரிதான். சம்பவம் நடத்தாக சொல்லப்படும் மக்கள் அதிகமாக நடமாடக்கூடிய இடம் என்றால் சரியல்ல மெயின் ரோடாகும் தனிவீடாகும். அருண்குமாரிடம் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

2. உண்மையாகவே அருண்குமார் ஒப்புதல் வாக்குமூலம் தந்திருந்தால் கையொப்பம் வாங்கியிருப்பேன் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதால் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3 ம் எதிரி எந்த ஒரு திருட்டுத் தொழிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. 3 ம் எதிரியிடம் இருந்து எந்த ஒருவழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. 3 ம் எதிரிக்கும் இந்த வழக்கும் சம்பந்தம் இல்லையென்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் 3 ம் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.